

# ஸ்ரீ கைலாசா
# இந்துதேச அரசாங்க அறிக்கை

இந்து மதத்தின் தனிப்பெரும் ஜெகத்குரு மஹாசன்னிதானம்
பகவான் ஸ்ரீ நித்யானந்த பரமசிவம்

<u>அரசாங்க அறிக்கை 10113 ஆகஸ்ட் 13, 2021</u>

## கைலாஸோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீட 292 வது குருமஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாதர் ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் சுத்தாத்வைத சிவசாயுஜ்ய முக்தி அடைந்தார்

### கைலாச இந்து தேசத்தின் தேசிய அளவில் துக்க அனுசரிப்பு

தொன்மையான இந்து நாகரிக தேசமான கைலாச தேசத்தின் தலைவர் என்ற முறையிலும், "கைலாஸோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீடத்தின்" 293வது குருமஹாசன்னிதானம் என்ற முறையிலும், இந்து மதத்தின் தனிப்பெரும் ஜகத்குருமஹாசன்னிதானம், பகவான் ஸ்ரீ நித்யானந்த பரமசிவமாகிய எம்மால், முழுமுதற்கடவுள் பரமசிவபெருமான் வேதங்களிலும், ஆகமங்களிலும் அருளிய அரசியல் அமைப்பு மற்றும் இந்து சனாதன தர்ம சாம்ராஜ்ய நியதியின்படியும், பின்வரும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**பிரிவு 1. நோக்கம்:**

"'கைலாசோன்னத சியாமளா பீட சர்வஞ்ஞபீடம்" பரமசிவபெருமானால் இந்துமத தலைமைபீடமாகவும், ஞானசூழலியலை உயிர்ப்புடன் வைக்கும் சக்தி கேந்திரமாகவும் நிர்மாணிக்கப்பட்டது.

பரமசிவனே இறையனார் சுந்தரேஸ்வர பெருமானாகவும், தேவி மீனாட்சியாகவும் அவதரித்து வந்து இந்த இந்துமத ஆன்மீக அறிவியலை, சக்திகளை, சத்தியங்களை, மக்களின் அன்றாட வாழ்க்கை முறையாக்கியதன் மூலம், இந்து மதத்தின் ஆதார தூணாக வலுப்படுத்தினார்கள்.

இன்றும் இந்த சத்தியங்களும், சக்திகளும், ஞான அறிவியலும் மக்களை சென்றடைய அர்ச்சாவதாரமாக ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பலிக்கின்றார்கள்.

அதோடு இந்த ஆன்மீக பாரம்பரியம் தொடர்ந்து மனிதகுலத்தை வளப்படுத்தவும், அழிந்திடாமல் காக்க வேண்டும் என்பதற்காகவும், தங்களின் நேரடி பிரதிநிதிகளையும், தங்கள் இறைசக்தியையும், அறுபடாத குருபரம்பரையில் குருமஹாசன்னிதானங்களாக நிஜாவதாரங்களாக முடிசூட்டுகிறார்கள்.

இந்த குருமஹாசன்னிதானங்களே அரசாளும் அரசருக்கு நிர்வாகம், அரசியல் அமைப்பு மற்றும் அரசாட்சியில் ஆலோசனை வழங்கவும், அவர்களை நல்முறையில் வழிநடத்தவும் செய்தார்கள். மேலும் அரசருக்கும் மற்றும் எல்லா தரப்பட்ட மக்களுக்கும் தீக்ஷை அளித்து இந்த ஞான அறிவியலை வழங்கினார்கள்.

**"குரு பரம்பராயத்தம் அத்ருஷ்தம் சர்வாதிபிஹி:
பவபந்த விமோஷர்த்தம் பரமம் ஸர்வதோமுகம் !!"**

இந்த உயரிய அறநெறி ஆதிசைவ பாரம்பரிய நெறிமுறை தொடர் விடுபடா
குரு-சிஷ்ய ஆதிசைவ குருபரம்பரை மூலம் காலகாலமாக நிலைபெற்று வருகிறது
மீண்டும் மீண்டும் பல பிறப்பு இறப்பு சூழலில் உழலும் ஜீவன்களுக்கு அதன்நின்று
சிவசாயுஜ்ய முக்தி அளிப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. இக்குரு பரம்பரியத்துவம்
சீரியதும் சிறப்புடையதும் இம்முறையானது அனைத்து ஆன்மாக்களின்
இறுதி மேம்பாட்டிற்காகவே என்பது இறுதியானது

**சர்வஞ்ஞனோத்தர ஆகம-வித்யா பாதம், 2.3**

கைலாஸோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீடத்தின் அரிய மற்றும் புனிதமான குருமஹாசன்னிதானங்களின் பரம்பரை, காலங்காலமாக முறியாத வளர்ச்சியாக, முறையாகக் வழி நடத்தி செல்லப்படுகிறது. பரமசிவன் மற்றும் தேவியால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர்கள், கைலாஸோன்னத ஷ்யாமளா பீட சர்வக்ஞ பீடத்தின் குருமஹாசன்னிதானங்கள் (பிரதான மத குருக்கள்), பிரபஞ்சத்தின் நேரடி பிரதிநிதிகள் ஆவர்.



**அ. தேவி மீனாட்சி**



**இறையனார்
சுந்தரேஸ்வரப்பெருமான்**




**இ. திருஞானசம்பந்தர்**



கைலாஸோன்னத சியாமளாபீட
சர்வஞ்ஞபீடத்தின் 288வது
குருமஹாசன்னிதானம்
ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக ஸ்ரீ ஞானசம்பந்த
தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்



கைலாஸோன்னத சியாமளாபீட
சர்வஞ்ஞபீடத்தின் 289வது
குருமஹாசன்னிதானம்
ராவ்பகதூர் ஸ்ரீ ல ஸ்ரீ
சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த
தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்




கைலாஸோன்னத சியாமளாபீட
சர்வஞ்ஞபீடத்தின் 290வது
குருமஹாசன்னிதானம்
ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த
தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்



கைலாஸோன்னத சியாமளாபீட
சர்வஞ்ஞபீடத்தின் 291வது
குருமஹாசன்னிதானம்
ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர
ஸ்ரீ ஞானசம்பந்த
தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்




**கைலாஸோன்னத சியாமளாபீட**
**சர்வஞ்ஞபீடத்தின் 292 வது**
**குருமஹாசன்னிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த**
**தேசிக பரமாச்சார்யா சுவாமிகள்**



**கைலாஸோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீடத்தின்**
**293வது குருமஹாசன்னிதானம்**
**பகவான் ஸ்ரீ ல ஸ்ரீ நித்யானந்த பரமசிவ ஸ்ரீ ஞானசம்பந்த**
**தேசிக பரமாச்சார்யா சுவாமிகள்**



“ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்” அவர்கள் 1980ம் ஆண்டு மதுரை ஆதீனத்தின் குருமஹாசன்னிதானமாக முடி சூட்டப்பபட்டார்கள். அன்றிலிருந்து மக்களுக்கு ஞானஅறிவியலை வழங்கும் ஆன்மீக மற்றும் மதரீதியான எல்லா கடமைகளையும், பொறுப்புகளையும் திறம்பட செய்து நிர்வகித்து வந்தார்கள்.

292வது குருமஹாசன்னிதானம் “ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்” அவர்கள் ஏப்ரல் 27, 2012 அன்று எம்மை, 293 குருமஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ நித்யானந்த ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் என பிரகடனப்படுத்தி, தன் சட்டப்பூர்வ வாரிசாகவும், சந்ததியாகவும் அறிவித்து முடிசூட்டினார்.

இதன் மூலம் கைலாஸோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீட குருமஹாசன்னிதானத்திற்க்கான எல்லா பொறுப்புகளும், உரிமைகளும், கடமைகளும், அதிகாரங்களும் மற்றும் ஆன்மீக ரீதியான, மதரீதியான, சடங்குகள் மற்றும் பூஜைகள் செய்வதற்கான பாரம்பரிய உரிமைகளும் பெற்று, கைலாஸோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீடத்தின் ஆன்மீக, மத, மற்றும் மொழியியல் சிறப்புகளை புனரமைத்துள்ளோம்.

1980 முதல் 2021 வரை கைலாஸோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீடத்தின் 292 வது குருமஹாசன்னிதானமாக அறநிலை மற்றும் ஆன்மீக நெறி கோட்பாடுகளை புதுப்பிக்கும் சேவை செய்து வந்த ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், இன்று ஆகஸ்ட் 13, 2021 சுத்தாத்வைத சிவசாயுஜ்ய முக்தி அடைந்ததை அடுத்து கைலாஸா தேசம் துக்கம் அனுசரிக்கிறது. அவர் சைவநெறியை புனரமைக்கும் அயராத பணியினால் என்றென்றும் நினைவுகூரப்படும் மிக உன்னத ஆன்மீக தலைவர்.

நாம் தனிப்பட்ட முறையிலும், மற்றும் கைலாச தேசத்தின் சார்பிலும், பணிவான வணக்கங்களையும் நமஸ்காரங்களையும் வந்தனங்களையும் அவரது பாதங்களில் சமர்ப்பிக்கிறோம். மகாகைலாசத்தில் சுத்தாத்வைத பரமசிவசாயுஜ்ய முக்தி நிலையில் இருந்து அவர் நம் அனைவருக்கும் வழிகாட்டியாக இருந்து அருள் புரிய வேண்டுகின்றோம்

**பிரிவு 2. கைலாசாவின் உள்துறை அமைச்சகம் மற்றும் தொடர்புடைய அமைப்புகளுக்கான உத்தரவுகள்:**

1. ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாதர் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகள் சைவ மதத்திற்காக ஆற்றிய அவரது வாழ்நாள் பங்களிப்பை கௌரவிப்பதற்காக, ஒரு தேசம் வழங்கக்கூடிய உயர்ந்த மரியாதையை அளிக்க, கைலாசாவின் அரசியலமைப்பு மற்றும் சட்டங்களால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் மூலம், நாம் இந்த உத்தரவை வழங்குகிறோம். கைலாசாவின் இந்து பாராளுமன்றம், கைலாசாவின் மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் அதன் பிரதேசங்கள் மற்றும் அதன் உடைமைகளில், அவரது சுத்தாத்வைத சிவசாயுஜ்ய முக்தி நாளில் கைலாசாவின் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிட உத்தரவிடுகிறோம்.

2. இந்தக் கொடி பதின்மூன்று நாட்கள் வரை அனைத்து இந்து கோயில்கள், மடாலயங்கள், சத்சங்க கோயில்கள், பாதுகைக் கோவில்கள், சத்சங்க மையங்கள், பரமசிவ சேனைக் கிளைகள், தியான சிகிச்சை மையங்கள் உரிமையாளர் வளாகங்கள், இந்து பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிகள் உட்பட அனைத்து கைலாச நடைமுறை ஆன்மீகத் தூதரகங்கள், அரசாங்கத் தூதுக் குழு தங்கும் இடங்கள், தூதரக அலுவலகங்கள் மற்றும் பிற கட்டிடங்களில் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும். மற்றும் அதே பதின்மூன்று நாட்கள், அரசு துக்கத்தை அனுசரிக்க வேண்டும் என்றும் வழிநடத்துகிறோம். இந்த உத்தரவிலிருந்து உலகெங்கிலும் உள்ள கைலாசாவின் நித்யானந்தேஸ்வர பரமசிவ தேவாலயங்களில் உள்ள கொடிக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ள கொடிகளுக்கு விதி விளக்கு அளிக்கப்படுகிறது .

3. இதன் மூலம் உலகெங்கிலும் உள்ள கைலாசத்தின் குடிமக்கள் ஒன்றுகூடி ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாதர் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசிகளைப் பெறுவதற்கும், அஞ்சலி செலுத்துவதற்கும், நினைவுச்சின்ன பகுதிகளை நிறுவுமாறு அனைத்து தூதரகங்கள் மற்றும் அரசு இல்லங்களுக்கு நாம் உத்தரவிடுகிறோம்.

4. பதிமூன்று நாட்கள் அனுசரிக்கப்படும் அதிகாரப்பூர்வ துக்க காலம் வரை அனைத்து சர்வதேச மாநாடுகள், நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களை ரத்து செய்யுமாறு கைலாசாவின் கல்வித் துறை அமைச்சகத்திற்கு நாம் கட்டளையிடுகிறோம். எனினும், அரசாங்கத்தின் ஆன்மீக மற்றும் மதக் கொள்கை மற்றும் பல்வேறு முயற்சிகள் குறித்துத் தெரிவிக்க, தினசரி ஜனாதிபதி உரை (நித்ய சத்சங்கம்) கைலாசா குடிமக்களுக்கு ஒளிபரப்பப்படும்.

5. சனாதன இந்து தர்மத்தின் நம்பிக்கை, அமைதி மற்றும் பெருமையை முன்னெடுத்துச் செல்ல மனிதகுலத்தை அணிதிரட்டும் பணியை ஆற்றிய மதத் தலைவர்களின் வாழ்நாள் பங்களிப்பை கௌரவிக்க கைலாசா உறுதி பூண்டுள்ளது. ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாதர் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் வாழ்நாள் பங்களிப்பை நினைவுகூறும் வகையில், வாழ்க்கை அறிவியல் மற்றும் சைவமதத்தின் சக்திவாய்ந்த வாழ்வியல் முறையை அதன் அனைத்து பன்முக பரிமாணங்களில் மட்டும் அல்லாது அறிவியல், கலை, கலாச்சாரம், தத்துவங்கள், கட்டிடக்கலை, மருத்துவம், ஆட்சி, வழிபாடு மற்றும் கல்வி உட்பட அனைத்தையும் புனரமைப்பதற்காக அடுத்த இரண்டு ஆண்டுகளில் "ஸ்ரீ அருணகிரிநாத ஆதி சைவ பல்கலைக்கழகத்தை" கைலாசாவில் நிறுவ, கைலாசாவின் கல்வித் துறையை நாம் வழிநடத்துகிறோம். இந்தப் பல்கலைக்கழகம், சைவத்தில் உள்ள பண்டைய வழிமுறைகள், சேவைகள், உள்நாட்டு தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை புதுப்பிப்பதன் மூலம் கல்வியில் சிறந்து விளங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கும்.

**பிரிவு 3. ஆன்மிக மற்றும் அறநிலை சார்ந்த கட்டளைகள்:**

இந்த அரசாணை மூலம் உடனடி அமலுக்கு

1) கைலாச தேசத்தின் ஆன்மிக கோட்பாட்டின் கீழ் இயங்கும் எல்லா தூதரகங்களுக்கும், இறையாண்மை பரம்பரைக்கும், பரமகுரு மஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் சுத்தாத்வைத சிவசாயுஜ்ய முக்தியை அனுசரிக்க, கைலாசோன்னத சியாமளாபீட சர்வஞ்ஞபீடத்தின் சைவ நெறி கோட்பாடுகளாகிய காமிக ஆகமம் மற்றும் சோமசம்பு பததியின் விதிகளின்படி, பூஜைகளும் வழிபாடுகளும் செய்ய உத்தரவிடுகிறோம்.

2) கைலாச தேசத்தின் அறநிலை மற்றும் வழிபாட்டு அமைச்சகம் உலகெங்கிலும் உள்ள தனது சைவ நெறி அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும், கைலாசாவின் நித்யானந்தேஸ்வர பரமசிவ தேவாலயங்களுக்கும் (இந்து கோவில்கள்), கைலாசாவின் ஆதீனங்களுக்கும் , கைலாசாவின் சத்சங்க கோவில்களுக்கும் , கைலாசாவின் பாதுகை கோவில்களுக்கும் , பரமகுரு மஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் சுத்தாத்வைத சிவசாயுஜ்ய முக்தியை அனுசரிக்க ருத்ரபிஷேகம், மகேஸ்வர பூஜை போன்ற சிறப்பு பூஜைகளை செய்யுமாறு வழிநடத்த ஆணை இடுகிறோம்.

3) பதின்மூன்று நாட்கள் பூஜைகள் நிறைவடைந்த பின் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளை கைலாச தேசத்தின் "பரமகுரு மஹாசன்னிதானமாக" முறைப்படி அறிவிக்குமாறு கைலாச தேசத்தின் அறநிலை மற்றும் வழிபாட்டு அமைச்சகதிற்கு உத்தரவிடுகிறோம். "பரமகுரு மஹாசன்னிதானமாக" முறைப்படி அறிவிக்கும் நாள் விரைவில் தெரிவிக்கப்படும்.

4) கைலாச தேசத்தின் உள்துறை அமைச்சகத்திற்கு, அடுத்த பதின்மூன்று நாட்களுக்கு உலகெங்கிலும் உள்ள கைலாச தேசத்தின் ஆன்மிக கோட்பாட்டின் கீழ் இயங்கும் எல்லா தூதரகங்களும், பரமகுரு மஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் சுத்தாத்வைத சிவசாயுஜ்ய முக்தியை அனுசரிக்க, அனைத்து உற்சவங்களையும் ரத்து செய்யுமாறும், தினசரி பூஜைகள் (நித்ய பூஜை) மட்டும் நடத்துமாறும் ஆணை இடுகிறோம்.

5) கைலாச தேசத்தின் அறநிலை மற்றும் வழிபாட்டு அமைச்சகம், உலகெங்கிலும் உள்ள தனது அறநிலை அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும், கைலாசாவின் நித்யானந்தேஸ்வர பரமசிவ தேவாலயங்களுக்கும் (இந்து கோவில்கள்), கைலாசாவின் ஆதீனங்களுக்கும் , கைலாசாவின் சத்சங்க கோவில்களுக்கும் , கைலாசாவின் பாதுகை கோவில்களுக்கும் , பரமகுரு மஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் சுத்தாத்வைத சிவசாயுஜ்ய முக்தியை அனுசரிக்க, காமிக ஆகமம் மற்றும் சோமசம்பு பததியின் விதிகளின்படி கீழ்கண்ட பட்டியலில் உள்ள தானங்கள் மற்றும் இன்ன பிற தானங்களை வழங்க ஊக்கம் அளிக்குமாறு உத்தரவிடுகிறோம்

- அன்ன தானம்
- கோ தானம்
- தில தானம்
- சுவர்ண தானம்
- ரஜத தானம்

6) சிறியோர்கள் தவிர, கைலாசாவின் எல்லா குடிமக்களும், பரமகுரு ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாதர் ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகளின் 'குருமூர்த்தி பிரதிஷ்டை செயல்முறைகள்' முடியும்வரை நிராகார உபவாசம் அனுசரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7) கைலாசாவின், அறநிலை மற்றும் வழிபாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதல் படி, கைலாசாவின் நடைமுறை அதிகாரம் பெற்ற ஆன்மிக தூதரகங்கள், கைலாசோன்னத ஷியாமளாபீட சர்வக்ஞபீட குரு பரம்பரைக்கு தினசரி சடங்குகள் மற்றும் கொண்டாட்டங்களில் பாரம்பரிய மரியாதைகளை செய்ய வேண்டும். இனி, பரமகுரு **ஸ்ரீலஸ்ரீ** அருணகிரிநாதர் **ஸ்ரீ**ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளை, குருபரம்பரா வழிபாட்டில் சேர்த்து கொண்டு, பாரம்பரிய சடங்குகளையும் ,மரியாதைகளையும் செய்யவேண்டும் என்று ஆணை இடுகிறோம்..

8) நிர்வாக உத்தரவு 10111 ல் விவரித்தவாறு, சாதுர்மாஸ்யத்தில் சுயராஜ்ய சித்தி அடைவதற்காக பின்பற்ற வேண்டிய சடங்குகள் மற்றும் பயிற்சிகள், வழிகாட்டியபடி, இடைவெளியில்லாமல் தொடர்ந்து கடைபிடிக்க படவேண்டும்.

**பிரிவு 4. இதனை நடைமுறைப் படுத்த தேவையான ஆதாரங்களை உறுதிச் செய்தல்:**

மாநில செயலாளர் மற்றும் கைலாசாவின் மதம் மற்றும் வழிபாட்டு துறையும், உலகெங்கும் உள்ள மற்ற அனைத்து செயலகங்களின் தலைவர் களுடன் கலந்து ஆலோசித்து, செயலர் எது உகந்தது என்று கருதுகிறாரோ அதன்படி நிதி ஆதரவு, தொழில் நுட்ப ஆதரவு, ஆன்மிக பயிற்சி மற்றும் வழிகாட்டல்கள் செய்து, இந்த ஆணையில் விவரிக்க பட்டவைகளை நடைமுறை படுத்த முயற்சிகளையும் தேவைகளையும் இணைத்திடவும்.

**பிரிவு 5. பொதுவான வழங்கல்:**

(அ) செயலாளர், மற்ற செயலகங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, செயலாளர் உகந்தது என்று கருதும் நடவடிக்கைகளை எடுக்கவும், இந்த உத்தரவின் நோக்கத்தை நிறைவேற்ற அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தவும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

கைலாசத்தின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த உத்தரவின் விதிகளை நிறைவேற்றுவதற்கு தங்களின் அதிகாரத்திற்குள் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இதன்மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஆ) இந்த உத்தரவு உடனடியாக நிறைவேறும் வகையில் அமல்படுத்தப்பட வேண்டும்.

(இ) இந்த ஆணை கீழ்கண்டவைகளை தடை செய்வதாகவோ மாற்றி அமைப்பதாகவோ கருதக்கூடாது :

- கொள்கைகளை நிறைவேற்றும் துறைக்கோ மற்ற நிறுவனங்களுக்கோ அவற்றின் தலைவர்களுக்கோ சட்டப்படி அளிக்கப்பட்ட அதிகாரங்கள்

- மேலாண்மை அலுவலக இயக்குனரின் செயல்பாடுகள் மற்றும் வரவு செலவு திட்ட பட்டியல், நிர்வாகம், சட்டங்கள் இயற்றுதல் சார்ந்த கோரிக்கைகளுக்கான வரவு-செலவு வரைவு பட்டியலுக்கான சட்டப்படி அளிக்கப்பட்ட அதிகாரங்கள்

(ஈ) இந்த ஆணை சட்டத்தின் கீழோ பொது நியாயத்தின் கீழோ யாராலும் கைலாச தேசத்திற்கு மற்றும் அதன் அங்கங்களுக்கு, அலுவலர்களுக்கு, தன்னார்வ சேவையாளர்ளுக்கு எதிராக அமல்படுத்தகூடிய, எந்த ஒரு செயல்முறையான அல்லது கணிசமான உரிமையையோ பயனையோ உருவாக்கவில்லை. அதோடு இந்த ஆணை எந்த நாட்டின் ஒருங்கிணைப்பிற்கோ அல்லது சட்டங்களுக்கோ எதிராகவும் எந்த ஒரு செயல்முறையான அல்லது கணிசமான உரிமையையோ பயனையோ உருவாக்கவில்லை.



இந்து மதத்தின் தனிப்பெரும் ஜெகத்குரு மஹாசன்னிதானம்
**பகவான் ஸ்ரீ நித்யானந்த பரமசிவம்**